நாள்: **05.08.2024**

**O.S. No. 83/2018**

**வா.சா.1**

**பெயர்: சேகர் (எ) ராஜசேகர், த/பெ. மாசிலாமணி**

**<u>மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் புதுக்கோட்டைக்கு வசிக்க சென்று சுமார் எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால் இரண்டு வருடங்கள் ஆகிறது. வி.ஆர்.என் நகரில் மனை எண் 16 ஐ எனது பெயரில் கலியமூர்த்தியிடமிருந்து கிரயம் பெற்று அதற்காக கிரய சாசனம் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவராலும் வாங்கப்பட்டு எனது பெயரில் எழுதப்பட்டுள்ளது. மேற்படி எனது பெரியப்பா குடும்பத்தினர்களும் சேர்ந்து வாங்கினார்கள். மேற்படி கிரயப் பத்திரத்தில் அந்த விபரம் கண்டுள்ளது. எனக்கு திருவிக நகரில் வீடு இருந்தது என்றால் சரிதான். அது பின்னிட்டு விற்பனை செய்யப்பட்டது என்றால் ஆமாம். எனது மருத்துவ செலவிற்காக என்னால் விற்பனை செய்யப்பட்டது. திரு.வி.க நகரில் சுமார் 15 வருடங்கள் குடியிருந்து வந்தேன் என்றால் ஆமாம். தாவா இடத்தில் கடை வைத்திருந்ததால் அங்கு இருந்தேன். திரு.வி.க நகரில் உள்ள எனது வீட்டை விற்பனை செய்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தை பார்த்தால் எந்த வருடம் புதுக்கோட்டைக்கு சென்றேன் என்று தெரிய வரும் என்றால் விற்பனை செய்த பின்னிட்டும் 3 வருடம் அந்த வீட்டில் குடியிருந்தேன். அவ்வாறு குடியிருந்ததற்கு ஏதேனும் ஒப்பந்தம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் 4 வருட கால பெந்தகத்திற்கு நான் வசித்து வந்தேன். அதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எழுதப்பட்டது. ஆனால், பதிவு செய்யப்படவில்லை. அவ்வாறு ஆவணம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கும்பகோணம் மெயின் ரோடு

100 அடியாக விரிவாக்கம் செய்யப்பட்டது என்றால் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அளவு தெரியவில்லை. தாவா இடத்திற்கும், மெயின் ரோட்டிற்கும் இடைப்பட்ட இடம் சுமார் 20 அடி என்றால் சரிதான். மேற்படி மெயின்ரோடு விரிவாக்கம் செய்யும்பொழுது தாவா இடத்திற்கு முன்புறம் உள்ள வீடு இடிக்கப்பட்டது என்றால் வீட்டின் எல்லை வரை எடுக்கப்பட்டுள்ளது. திருவாரூர் - கும்பகோணம் சாலையிலிருந்து இலவங்கார்குடி சாலை தாவா இடத்தின் மேற்குபுறத்தை ஒட்டினாற்போல் செல்கிறது என்றால் சரிதான். தாவா இடத்திற்கு மேற்குபுறம் இலவங்கார்குடி சாலை ஒட்டினாற்போல் ஒரு காலி மனை இருந்தது என்றாலும், அதில் வாழைமரம் இருந்தது என்றாலும் இல்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தில் மேற்குபுறம் காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அது அரசாங்க இடம். மேற்படி காம்பவுண்ட் சுவர் சுமார் 35 வருடங்கள் இருக்கும். 35 வருடங்களாக அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை என்றால் சரிதான். தற்போது தான் அளந்து பார்த்தார்கள். ரோடு போடுவதாக சொல்லி காம்பவுண்ட் சுவரை இடிப்பதாக சொல்லியுள்ளார்கள். நாளது தேதியில் காம்பவுண்ட் சுவர் முற்றிலுமாக இடிக்கப்பட்டு சாலை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. தாவா இடத்தின் மேற்கு பகுதியில் காம்பவுண்ட் சுவர் இல்லை என்றால் சரியல்ல. தெற்குபுறத்தில் தாவா இடத்தை ஒட்டினாற்போல் காம்பவுண்ட் சுவர் இருந்தது என்றால் இல்லை. அவ்வாறு காம்பவுண்ட் சுவர் இருந்தது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்லி மேற்படி சங்கதியை மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் கடை நம்பர் இல்லை என்றாலும், அந்த கடை இல்லை என்றாலும் சரியல்ல. நான் அரசியல் கட்சியில் இருந்த நபர் என்றால் சரிதான். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக. அந்த அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி கடையை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து கிளார்க் மீது வரி ரசீது

போடவில்லை என்று மனு போட்டு நிலுவையில் உள்ளது என்றால், தவறாக மனு ரசீது போட்டதற்காக மனு கொடுத்தேன். அவர் சரியாக தான் ரசீது போட்டார் என்றாலும், எனது செல்வாக்கை பயன்படுத்தி எனது பெயரில் வரி ரசீது போடாத காரணத்தினால் அவர் மீது மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு தேவைப்படும் சூழ்நிலைக்காக நபர்கள் மீது மனு தாக்கல் செய்வது எனது வழக்கம் என்றால் சரியல்ல. 2021 வரை எனது பெயருக்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு அளவீடு செய்து மாத வாடகையாக ராஜன்கட்டளை நிர்ணயிப்பதால் ரசீது கொடுக்கவில்லை. அவ்வாறு சொல்வது பொய் என்றாலும், நாளது தேதிவரை அளவீடு செய்யப்பட்டு யார் உரிமையாளரோ அவரது பெயரில் ரசீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அதிகாரத்தை பயன்படுத்தி ராமனாதன் என்ற வாத்தியாரை பயன்படுத்தி எனது பெயருக்கு ரசீது வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் திருமணத்திற்கு பிறகு புதுக்கோட்டை சென்று விட்டேன் என்றால் சரியல்ல. மகனுடைய திருமணத்திற்கு பின்பு இங்குள்ள சொத்துக்களை விற்றுவிட்டு புதுக்கோட்டைக்கு சென்று விட்டேன் என்றால் இல்லை. உடல்நிலை சரியில்லாத காரணத்திற்காக புதுக்கோட்டை சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராஜன் கட்டளையின் பகுதிதாரர் என்பதை காட்டக்கூடிய எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2018 தாவா காலக்கட்டத்திற்கு மட்டும் தான் பகுதி ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதற்கு முன்பான காலக்கட்டத்திற்கும் அந்த ரசீதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி ரசீதில் 1426 ம் பசலி முடிய என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி ரசீதுகள் அனைத்துமே வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. 2/82 என்ற கதவு எண் கிடையாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா இடத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டு 2019 ல் நான்

காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகார் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்தவிதமான சண்டையும் ஏற்படவில்லை என்றாலும், நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 22.07.2018 ல் எந்தவிதமான சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், 2019 ல் நடந்த பிரச்சனைக்காக தான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்குமூலம் கற்பனையானது என்றாலும், நான் தாவா இடத்தில் வசிக்கவில்லை என்றாலும், நான் புதுக்கோட்டையில் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாவா இடத்தில் கே.சி பால் நடத்தியதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அங்கு கே.சி பால் நடத்தியதாகவும், அங்கு தங்கி இருந்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் / - S. விஜய் ஆனந்த்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
திருவாரூர்.